| திருக்குறள் ஒப்புவித்தல் / Thirukkural Recital | |
|---|---|
| **வயது/Ages**: 5&6 | Level / நிலை : 3 |
| **விதிமுறைகள்**: | 1. இரண்டு நிமிடத்திற்குள் போட்டியாளர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முப்பது குறள்களிலிருந்து ஒப்பிக்க வேண்டும்<br>2. குறளைத் தெளிவாகவும், முழுமையாகவும் ஒப்பிக்க வேண்டும்<br>3. குறளின் ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாக உச்சரிக்க வேண்டும்<br>4. குறட்பாக்களை 2 நிமிடங்களுக்குள் அதிக எண்ணிக்கையில் சொல்பவர்களே வெற்றியாளர்கள்<br>5. வெற்றியாளர் சொல் உச்சரிப்பு, பிழையின்றி, தங்கு தடையின்றி சொல்லுதல், ஒப்புவிக்கும் விதம் மற்றும் எடுத்துக் கொண்ட நேரம் ஆகியவை கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவர்<br>6. நடுவர்களின் முடிவே இறுதியானது |
| **Instructions:** | 1. Participant must recite Thirukkurals from the preselected list of 30 (Scroll below)<br>2. Each recited thirukkural must be clear and complete<br>3. Each word in the kural should be pronounced clearly<br>4. Winners recite the most Thirukkurals in 2 minutes<br>5. Winners selection would be based on 5 criteria – Pronunciation, Content, Flow, Presentation, Duration<br>6. Judges decisions are final |

. Copyright © 2020 All Rights Reserved

## திருக்குறள் பட்டியல்/Thirukkual List

**1)** **குறள் 1** **கடவுள் வாழ்த்து**

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவான் முதற்றே உலகு.**

**உரை:** எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

---

**2)** **குறள் 3** **கடவுள் வாழ்த்து**

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

**உரை:** அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

---

**3)** **குறள் 20** **வான்சிறப்பு**

**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு.**

**உரை**: எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

---

**4)** **குறள் 19** **வான்சிறப்பு**

**தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்கா தெனின்.**

**உரை**: மழை பெய்யவில்லையானால், இந்த பெரிய உலகத்தில் பிறர் பொருட்டு செய்யும் தானமும், தம் பொருட்டு செய்யும் தவமும் இல்லையாகும்.

---

**5)** **குறள் 26** **நீத்தார் பெருமை**

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

. Copyright © 2020 All Rights Reserved

**உரை**: செய்வதற்கு அருமையான செயல்களை செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

---

6) **குறள்** 39 **அறன்வலியுறுத்தல்**

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல.**

**உரை:** அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை: புகழும் இல்லாதவை.

---

7) **குறள்** 45 **இல்வாழ்க்கை**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

**உரை**: இல்வாழ்க்கையின் அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழக்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

---

8) **குறள்** 72 **அன்புடைமை**

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

**உரை**: அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்: அன்பு உடையவர் தம் உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

---

9) **குறள்** 100 **இனியவை கூறல்**

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

**உரை:** இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும் போது அவற்றை விட்டு காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.

---

. Copyright © 2020 All Rights Reserved

**10)** **குறள் 101** **செய்ந்நன்றி அறிதல்**

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.**

**உரை:** தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்கு செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைமாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

---

**11)** **குறள் 108** **செய்ந்நன்றி அறிதல்**

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று.**

**உரை:** ஒருவரர்முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று; அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.

---

**12)** **குறள் 110** **செய்ந்நன்றி அறிதல்**

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

**உரை:** எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

---

**13** **குறள் 121** **அடக்கமுடைமை**

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**

**உரை**: அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்தி விடும்.

---

**14)** **குறள் 131** **ஒழுக்கமுடைமை**

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

. Copyright © 2020 All Rights Reserved

**உரை**: பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடையச் சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும்.

---

**15) குறள் 140 ஒழுக்கமுடைமை**

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

**உரை**: உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர்.

---

**16) குறள் 225 ஈகை**

**ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்.**

**உரை**: தவ வலிமை உடையவரின் வலிமை பசியை பொறுத்துக் கொள்ளலாகும், அதுவும் அப் பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

---

**17) குறள் 236 புகழ்**

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

**உரை**: ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும், அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பதே நல்லது.

---

**18) குறள் 240 புகழ்**

**வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்.**

**உரை**: தாம் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவர், புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.

---

. Copyright © 2020 All Rights Reserved

**19)** **குறள் 291** **வாய்மை**

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத செயல்.**

**உரை**: வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைக் சொல்லுதல் ஆகும்.

---

**20)** **குறள் 299** **வாய்மை**

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.**

**உரை:** புறத்தில் உள்ள இருளை நீக்கும்) விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல, சான்றோர்க்கு (அகத்து இருள் நீக்கும்) பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும்.

---

**21)** **குறள் 305** **வெகுளாமை**

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்.**

**உரை:** ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும், காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்துவிடும்.

---

**22)** **குறள் 310** **வெகுளாமை**

**இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**

**உரை:** சினத்தில் அளவு கடந்து சென்றவர் இறந்தவரைப் போன்றவர், சினத்தை அடியோடு துறந்தவர் துறந்தவர்க்கு ஒப்பாவர்.

---

**23)** **குறள் 314** **இன்னாசெய்யாமை**

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்.**

. Copyright © 2020 All Rights Reserved

**உரை:** இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்து விடுதலாகும்.

---

**24)** **குறள் 391** **கல்வி**

**கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

**உரை**: கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

---

**25)** **குறள் 392** **கல்வி**

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

**உரை**: எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

---

**26)** **குறள் 411** **கேள்வி**

**செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்து ளெல்லாந் தலை.**

**உரை**: செவியால் கேட்டறியும் செல்வம், செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும், அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும்.

---

**27)** **குறள் 416** **கேள்வி**

**எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

**உரை**: எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும், கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.

---

. Copyright © 2020 All Rights Reserved

**28) குறள் 423 அறிவுடைமை**

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

**உரை**: எப்பொருளை யார் இடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப் பொருளின் மெய்யானப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

---

**29) குறள் 786 நட்பு**

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.**

**உரை**: முகம் மட்டும் மலரும் படியா நட்பு செய்வது நட்பு அன்று, நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பு ஆகும்.

---

**30) குறள் 788 நட்பு**

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

**உரை**: உடைநெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக்காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

---

. Copyright © 2020 All Rights Reserved